# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,094 — 1920 ம் ௵ பங்குனி௴ 26 ந் திகதி வெள்ளிக்கிழமை.


# Part IV.— நான்காம் பாகம்.

## அரசாட்சியாரின் விளம்பரம்.

பெரிய பிரித்தானியாவும் அயர்லாந்தும் சேர்ந்த ஐக்கிய இராச்சியத்தினதும் கடல்களுக் கப்பாலுள்ள ஆதிபத்தியங்களினதும் அரசரும் சமயபரிபாலகருமாகிய மகத்துவம்பொருந்திய ஐந்தாம் ஜோர்ஜ் வேந்தர் நாமத்தினாலே:

மகாகௌரவம்பொருந்திய பாத் என்னும் வரிசையின், நைற்கொம்மான்டர் என்னும் பட்டவர்த்தனரும், இலங்கைத்தீவையும் அதனைச்சேர்ந்த நாடுகளையும் அரசாட்சி செய்கிறவருமாகிய சேர் கிறெயிம் தொம்சன் அவர்களால் செய்யப்படும்

### பிரசித்தம்.

கிறெயிம் தொம்சன்.

1916 ம் ஆண்டு பங்குனிமாதம் 17 ந் திகதி பிரசுரப்படுத்தப்பட்ட பிரசித்தத்தில் காட்டப்பட்டிருக்கும் சினமற்றோகிருவும் வேறு படங்களும் காட்டும் விதானங்கள் என்னப்படும் உபவிதிகளுக்குப் பதிலாய் 1910 ம் ஆண்டின் நகரசங்கச் சட்டத்தின் 109 (1) ம், 110 (16) ம் பிரிவுகளின் பிரகாரம் கண்டி நகரசங்கத்தாரால் இயற்றப்பட்ட கீழ்ச்சொல்லப்படும் உபவிதிகள் குறித்த சட்டத்தின் 109 (3) ம் பிரிவின் பிரகாரம் அதிகார மந்திரசபையாரோடு கூடிய ஆட்சியதிகாரியவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால்:

இலங்கைத்தீவின் குறித்த ஆட்சி அதிகாரியாகிய நாம் மேற்சொல்லிய சட்டம் 109 (3) ம் பிரிவினால் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைச் செலுத்தி இத்துடன் இணைக்கப்படும் அட்டவணையிற் காட்டியிருக்குங் குறித்த உபவிதிகளைப் பிரசித்தப்படுத்துகிறோம் என்று நீவிர் அறிந்துகொள்வீராக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டு மார்ச்மாதம் பதினாறாந் தேதியாகிய இன்று மேற்சொல்லிய இலங்கைத்தீவிலுள்ள நுவரெலியாவில் கொடுக்கப்பட்டது.

உத்தமனாரது கட்டளைப்படி,

பீ. ஹோர்ஸ்பரோ,
அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

கடவுள் அரசரை ஆசீர்வதிப்பாராக.

---

### அட்டவணை.—குறித்த உபவிதிகள்.

இதன்கீழ் காட்டப்படும் உபவிதியானவை பயஸ்கோப் என்னும் சினமற்றகுருவ் மஜிக்லென்றன் அல்லது அதுபோல் இயற்றப்பட்ட இயந்திரத்தால் காட்டும் காட்சி அல்லது ஒரு டிறுமாவை ஆடுகிற காட்சி அல்லது கூத்து கண்கட்டிவித்தை கம்பங்கூத்து அல்லது நாடகசாலையில் நடக்கும் வேடிக்கைகளால் எதையாவது காட்டும் வினோத பகிரங்க காட்சிகளுக்கு ஏற்புடையனவாகும்.

#### அர்த்தங்கள்.

லைசன்ஸ்காறன் என்பது 4 ம் சட்டத்தின்படி லைசன்ஸ்பத்திரத்தில் கையொப்பம் வைத்திருக்கும் ஆளை அல்லது ஆட்களைக் கருதும், சங்கத்தலைவரென்பது கண்டி நகரசங்கத் தலைவரைக் கருதும்.

#### லைசன்ஸ் எடுக்கவேண்டிய கட்டிடங்கள்.

1. யாராவது ஒரு கட்டிடத்தை, ஒரு மடுவத்தை அல்லது ஒரு இடத்தை காட்சிகாட்டுகிறதற்காக ஒரு லைசன்ஸ் இல்லாமல் பாவிக்க அல்லது பாவிக்கப்பட விடப்படாது. அப்படி லைசன்ஸ் எடுத்தவன் லைசன்சில் குறித்திருக்கும் ஏற்பாடுகளுக்கு அல்லது இவ்விதானத்திலெதற்கும் விரோதமாக இந்த இடத்தில் ஏதாவது நடத்த அல்லது நடப்பிக்கப்படாது.

2. மேற்சொல்லப்பட்ட வகையான ஒரு கட்டிடத்தை ஸ்தாபிக்கிறதற்கு உத்தரவு எடுக்கப் பிரியப்படுகிறவன் தான் கட்டிடத்திற்குத் தகுதி என்று கண்ட இடத்துக்குக் கிட்ட சனப்புளக்கமான இடங்களுக்குத் தெரியக்கூடிய விதமாய் அறிவித்தல் கடுதாசி ஒட்டி கண்டிப் பட்டணத்தில் பிரசித்தப்படும் மூன்று புதினப்பத்திரிகைகளில் பிரசுரப்படுத்தின பிறகு சங்கத்தலைவருக்கு விண்ணப்பம் எழுதி அனுப்பவேண்டும். சங்கத்தலைவர் இவ்விண்ணப்பப் பத்திரத்தைப்பற்றிய அலுவல்கள் எல்லாம் முடிக்கும் வரைக்கும் அறிவித்தல் கடுதாசி எடுக்கப்படாது. அந்த இடத்தில் ஒட்டிய அறிவித்தல் கடுதாசியும் அறிவித்தல் போடப்பட்ட புதினப்பத்திரிகைகளின் ஒவ்வொன்றினதும் பிரதியும் கிடைத்த 14 நாட்களுக்குப் பின்தான் சங்கத்தலைவர் விண்ணப்பத்தைப் பற்றி யோசனைபண்ணுவார். சொல்லப்படவேண்டியவைகள்.—விண்ணப்பமானது அந்தக் காணிக்கும் காணியில் கட்டப்போகிற கட்டிடத்துக்கும் விண்ணப்பக்காரனுடைய உரித்து எப்படிப்பட்டதென்றும் என்னவிதமான காட்சி காட்டுகிறதற்காக அந்த நிலமும் கட்டப்போகிற கட்டிடமும் பாவிக்கப் படப்போகின்றன வென்பதையும் விபரமாய்க் காட்டவேண்டும். எட்டில் ஒரு இஞ்சு ஒரு அடியைக்காட்டி படமெழுதும் மெழுகுசீலையின் மினுக்கமில்லாத பக்கத்திற் றேப்பட்டிருக்கும் முழுக்காணியையும் அதின் உயரத்தையும் பகுதிகளையும் காட்டும் படம் இரண்டும் ஓர் இஞ்சு ஒரு செயினைக்காட்டி றேப்பட்டுப் பக்கத்துக்குக் காணிகளுடையவும் அக்காணிக்கருகிலுள்ள பிரசித்த வழிகளையுங் காட்டும் படம் ஒன்றும் கூட அனுப்பப்பட வேண்டும்.

காணியில் கட்டப்போகிற கான்களைக்காட்டும் ஒரு படமும் பெரிய வாய்க்காலோடு சேரும் கானையும், அந்த றேட்டின் நிலமட்டத்தையும் நீரை வெளியே பாய்ச்சிவிடவேண்டி யிருக்கிற நிலத்தின் மட்டத்தையும் பெரிய வாய்க்கால்களின் நிலமட்டத்தையும் குறித்த படத்தையும் அனுப்பவேண்டும். கட்டிடத்துக்கு உபயோகிக்கும் சாமான்களை வித்தியாசமாய் காட்டுகிறதற்காக படங்கள் நிறங்கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். மேல்வீட்டுப் படிகளுடைய விசாலத்தையும் ஒவ்வொன்றிலிருக்கும் படிகளுடைய தொகை, பாதைகள், ஏறும் இறங்கும் பாதைகள், கதவு நிலைகளுடைய விசாலமும் நிலைகள் மற்றப்பகுதிகளுடைய உயரமும் காட்டும் படமாயு மிருக்கவேண்டும். சுவர்களின் அகலத்தையும் மற்றும் உபயோகிக்கும் சாமான்களின் குறைந்த

அளவையும் அடையாளமாக இலக்க எழுத்தில் காட்டவேண்டும் ஒவ்வொரு படத்திலும் பிரதான திக்குகளைக் குறிக்கவேண்டும். அக்காணியின் வெவ்வேறு இடங்களில் அடக்கக்கூடிய ஆட்களின் தொகையும் ஒவ்வொரு ஆளுக்குக் கொடுக்கும் இடம் எவ்வளவென்றும் அதில் செய்யப்போகிற வேலை எப்படிப்பட்டதென்றும் என்னவிதமான சாமான் பாவிக்கப்படுகிறதென்பதையும் இந்த விதிகளுக்கிணங்க கட்டிடவேலை என்னவிதமாய் நடக்கப்போகிறதென்பதையும் படத்தில் காட்டவேண்டும்.

## லைசென்ஸ் கொடுக்கிறது.

3. லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைத்தபொழுது சங்கத்தலைவர் வேண்டியஅளவு விசாரணைசெய்த பிறகும் 5 ம் சட்டத்தின்படி சேரவேண்டிய செலவு கட்டினபிறகும் லைசென்ஸ் அவர் தேள்வை என்று நினைக்கிற பிரமாணங்களுக்கமைய கொடுப்பார். இந்த சட்டத்தின்படி கொடுக்கப்படும் லைசென்ஸ் எதையும் தன் விருப்பப்படி சங்கத்தலைவர் எவ்வேளையிலாவது அழிக்க அல்லது தடைபண்ணிவைக்க அல்லது திருத்த இயலும் ஒரு கட்டிடத்துக்குக் கீழே அல்லது மேலே கட்டும் கட்டிடத்துக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட மாட்டாது. அந்தக் கட்டிடத்தில் குடியிருக்கும் அறைகள் இருக்கப்படாது. நிலமட்டத்துக்கு உசந்த கலரியையும் சேர்த்து இரண்டு வரிசையுள்ள இடங்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படமாட்டாது. (வரிசைகளின் சரிவு 35 டிகிரிக்கு மேற்படக்கூடாது).

4. இத்துடனிணைக்கப்படும் A அடையாளமிட்ட மாதிரிக் கடுதாசியில் லைசென்ஸ் கொடுக்கப்படும். அதில் லைசென்ஸ் காறனுடைய பெயரும், விலாசமும், காணியிருக்கும் இடமும் அதின் விபரமும், அதின் முழு விசாலமும் ஒரு தரத்தில் இருக்கக்கூடிய ஆட்களின் தொகையும் போறவாற வாசல்களின் தொகையும், எந்தெந்த நேரங்களில் அக்காணி திறக்கப்பட்டிருக்கலா மென்பதையும், எந்தக் காரணத்துக்காகப் பாவிக்கலாமென்பதையும், லைசென்ஸ் எத்தனை நாளைக்குச் செல்லு மென்பதையும், லைசன்சின் கடசிநாளும் அதில் குறித்திருக்கும் ஏற்பாடுகளெல்லாம் விவரமாய் எழுதப்பட்டிருக்கும் லைசென்ஸ் இரண்டு பிரதிகளில் முதல் பிரதியும் இணைப்பிரதியுமாகக் கொடுக்கப்படும். அதில் முதல் பிரதி லைசென்ஸ்காறன் வசமும் இணைப்பிரதி சங்கத்தலைவர் வசமுமிருக்கும். லைசென்ஸ்காறன் இரண்டு கொப்பிகளிலும் கையொப்பம் வைக்கவேண்டும்.

## வேதனங்கள்.

5. கீழ்க்குறிக்கும் வீதப்படி விண்ணப்பக்காறன் லைசென்ஸ் பெறமுந்தி செலவுகட்டவேண்டும் :—

### வகுப்பு A.

500 பேரை அல்லது அதற்குமேற்பட கொள்ளக்கூடிய இடத்துக்கு :

| | | |
|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு (மார்கழிமாதம் 31 ந் திகதி முடியும்வரையும்) | ரூபா | 300 |
| ஒரு மாசத்துக்கு | ,, | 50 |
| ஒரு நாளைக்கு | ,, | 5 |

### வகுப்பு B.

200 பேருக்குக் கூடவும் 500 பேருக்குக் குறையவும் கொள்ளக்கூடிய இடத்துக்கு :

| | | |
|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு லைசென்ஸ் (மார்கழிமாசம் 31 ந் திகதி முடியும்வரையும்) | ரூபா | 125 |
| ஒரு மாசத்துக்கு | ,, | 25 |
| ஒரு நாளைக்கு | ,, | 2/50 |

### வகுப்பு C.

200 பேருக்குக் குறையக் கொள்ளக்கூடிய இடத்துக்கு :

| | | |
|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு லைசென்ஸ் (மார்கழிமாதம் 31 ந் திகதி முடியும்வரையும்) | ரூபா | 75 |
| ஒரு மாசத்துக்கு | ,, | 15 |
| ஒரு நாளைக்கு | ,, | 1/50 |

## குறைகள் நிவிர்த்திசெய்தல்.

6. சங்கத்தலைவர் காலத்துக்குக்காலம் அப்படிப்பட்ட காணிகளையெல்லாம் சோதிப்பிக்கவும் அப்படிச் சோதிக்கும்போது இந்த உபவிதிகளிற் சொல்லியிருக்குங் காரியபாகங்களைப்பற்றி ஏதுங் குறை அல்லது குற்றம் இருந்தால் அதின் சொந்தக்காறனுக்கு அல்லது குத்தகைக்காறனுக்கு எழுத்தில் அக்குற்றங்களை அல்லது பழுதுகளை தன்னுடைய திருத்திக்கு அதில் குறித்த காலத்துக்குள்ளாகத் திருத்தும்படி அறிவித்தல் கொடுப்பார். அப்படி அறிவித்தல் கொடுக்கப்பட்ட சொந்தக்காறன் அல்லது குத்தகைக்காறன் அந்தக் கேள்வியின்படி செய்யவேண்டும்.

## மாற்றங்கள்.

7. மேற்சொல்லப்பட்ட இடங்களுக்கு சங்கத்தலைவரிடமிருந்து எழுத்தில் உத்தரவுபெற்றபின்னல்லாமல் ஒரு மாற்றமும் செய்யப்படாது. ஏதும் செய்யப்போகிற மாற்றத்தை அல்லது புதுக்கக் கூட்டிக் கட்டப்போகிறதைப்பற்றி லைசென்ஸ்காறன் அல்லது சொந்தக்காறன் சங்கத்தலைவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுக்கவேண்டும். அவ்வறிவித்தலுடன் முதன்முதற் கேட்டுக்கொண்டவிதமாக அக்காணியுடைய முழு அளவையும் செய்யப்போகிற வேலையின் மாதிரியைக் கொண்ட படமும் அனுப்பவேண்டும். சங்கத்தலைவர் தேள்வையானால் அக்காணியை இன்னுமொருதரம் அளப்பித்துக்கொள்ளுவார். ஆனால் அப்படிப்பட்ட அளவையின் செலவு லைசென்ஸ்காறன் அல்லது சொந்தக்காறன் இறுக்கவேண்டும்.

## நெருப்புப்பிடித்தலைத் தடுப்பதற்காகிய வழிவகைகள்.

8. கட்டிடம் கட்டுகிறதற்குப் பாவிக்கும் சாமான்கள் நெருப்புப்பிடிக்கக்கூடியதோ என்பதைப்பற்றி சங்கத்தலைவர் அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர் தீர்மானிக்கவேண்டும்.

9. அப்படிப்பட்ட கட்டிடங்களில் நிலங்கள், வழிகள், கட்டிடத்தின் கூரையும் சனங்கள் புளங்கும் மற்றுமிடங்களும் சங்கத்தலைவருடைய திருத்திக்கு நெருப்புப்பிடிக்கக்கூடாத சாமான்களால் கட்டப்பட வேண்டும். மெதுமையான மரம் அல்லது நெருப்புப்பிடிக்கக்கூடிய சுவர் லைனிங், பிரிக்கும் அடைப்பு, மறைப்பு, தடைகள் அல்லது வேறும் அப்படிப்பட்ட சாமான்கள் பாவிக்காமலும் லைனிங்கும் சுவருக்கும் இடையில் வெளிவிடாமலும் இருக்கவேண்டும். மேடையின் மரவேலை எல்லாம் நெருப்புப்பிடிக்கக்கூடாத விதமாய் பெலமான மரத்தால் செய்யப்பட்டிருக்கவேண்டும். மேடையையும் சனங்கள் இருக்குமிடத்தையும் பிரிக்கும் ப்றொசீனியம் திரை சங்கத்தலைவருடைய திருத்திக்கு நெருப்புப்பிடிக்கக்கூடாத சாமானால் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

10 நெருப்புப் பிடியாதவண்ணம அல்லது பிடித்த நெருப்பை தூற்கிறதற்காக லைசென்ஸ்காறன் தேள்வையான அளவு தண்ணீரும் உபகரணங்களும் வைக்க அல்லது வைப்பிக்க வேண்டும். சங்கத்தலைவர் தேள்வையென்றபடி ஜலசூத்திரமும் தண்ணீர்பாச்சும் குளல்களும் கட்டிடத்துக்குக் கிட்ட வைத்திருக்கவேண்டும்.

11. சங்கத்தலைவரின் கட்டளைப்படி தண்ணீர்பாச்சும்குளல், தண்ணீர் நிரப்பிய வாளிகள், கம்பிளி, அல்லது தணிதுண்டு, காய்ந்த மணல் வைக்கவேண்டுமென்று குறிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

12. சங்கத்தலைவர் சம்மதிகொடுத்தும் அக்காணியின் சொந்தக்காறனால் சம்பளம் கொடுப்படுபவனுமாகிய ஒரு ஆள் மேற்குறித்த கருவிகளை எப்பொழுதும் ஆயத்தமாய் வைத்திருக்கும்படி நியமிக்கப்படவேண்டும்.

13. கோடரிகள் கொழிக்கிகள் நெருப்புநேரத்தில் திரைகளை இறக்கக்கூடிய ஆயுதங்கள் உடனே பாவிக்க ஆயத்தமாய் எப்பொழுதுமிருக்கவேண்டும்.

14. சங்கத்தலைவர் அக்காணியின் சொந்தக்காறனை அல்லது குத்தகைக்காறனை அவ்விடத்துக்கும் நெருப்புதூற்கிற இயந்திரம் இருக்கும் கிட்டின டேசனுக்கும் தெல்லிபோம் வைக்கவேண்டுமென்று கட்டளைபண்ண இயலும்.

14A. நெருப்புப்பிடிக்கக்கூடிய அல்லது வெடிக்கக்கூடிய சாமான்களாகிய மண்ணெண்ணெய், பெற்றோல், காபைட் வெடிமருந்து அல்லது அப்படிப்பட்ட வேறு சாமான்கள் ஒரு நாளைக்குத் தேவையான அளவுக்கு மேலதிகமாக லைசென்ஸ் கொடுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்கப்படாது. கீழ்க்குறிக்கும் 15 ம் சட்டம் துவக்கம் 22 ம் சட்டத்தையு முட்பட ஒரு அல்லது பலவரிசை உள்ள மேல்வீடுகளுக்கே ஏற்புடையனவாமே.

15 சங்கத்தலைவருடைய திருத்திக்கு நெருப்புப்பிடிக்கக்கூடாத சாமானால் மேடைக்கு முன் இருக்கும் ப்றொசீனியம் வெளியில் திரைபோடப்பட்டிருக்க வேண்டும். ஒரு காட்சிக்கு குறைந்தது ஒரு முறைஎன்றாலும் முளுஸ்ரேஜ் மறையக்கூடியதாய் அத்திரை போடப்பட வேண்டும்.

16. ஸ்ரேஜுக்கும் முகட்டுக்கும் இடையிலிருக்கும் தூரத்தில் சீன்களையும் நெருப்புப் பிடிக்கக்கூடாத சாமானால் செய்யப்பட்ட திரைகளையும் ஒருதண்டாகவே சுருட்டாமலும் ப்றொசீனியம் வெளியில் மேலே உசத்திவிடக்கூடியதாயிருக்க வேண்டும் ஸ்ரேஜுக்கு மேலே இருக்கும் கூரைநெருப்புப் பிடிக்காத அல்லது பெலனுள்ள கட்டிடமாயிருக்க தேள்வையில்லை.

17. ஸ்ரேஜுக்குமுன் ப்றொசீனியம் பாவிக்கும் நாடக சாலையில் ஸ்ரேஜ் சனங்கள் புளங்கும் இடத்திலிருந்து செங்கல்லால் 15 இஞ்சுக்குக் குறையாத அகலமான ஒரு ப்றொசீனியம் சுவர் கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட கட்டிடம் பெலமான அஸ்திவாரம் உள்ளதும் கூரை மட்டத்துக்கு குறைந்தது 3 அடிக்கு மேலே மேற்சொன்ன அகலத்தில் கட்டினதாயிருக்க வேண்டும்.

18. ப்றொசீனியம் சுவரில் அதின வெளியைவிட அதில் மூன்று வாசலுக்கு மேலதிகமாக வாசல்கள் இருக்கப்படாது.

19. அப்படியான வாசல் 24 சதுர அடிக்கு மேற்பட்டதாயிருக்கப்படாது. ஒவ்வொரு வாசலும் வில்லில்லாமல் தானாய் சாத்தக்கூடிய ஒவ்வொரு இரும்புக் கதவு போடப்பட்டிருக்க வேண்டும்.

20. உடுக்கிற அறை புறம்பான கட்டிடமாய் அல்லது நாடகசாலையிலிருந்து புறம்பான சுவரால் பிரிக்கப்பட்டதாயும் சங்கத்தலைவர் சம்மதப்படக் கூடியவிதமான வாசல்களுள்ளதாயும் இருக்கவேண்டும்.

21. அப்படிப்பட்ட இடங்களில் உடையக்கூடிய வெளிச்சங்களும் லாம்புகளும் வெளிப்புறத்தில் பூட்டப்பட்ட கல்வனைஸ்பண்ணின இரும்புகம்பி வலைகளால் பாதுகாக்கப்பட வேண்டும்.

22. ஸ்ரேஜுக்கு கீழே இருக்கும் வெளியில் சங்கத்தலைவர் அனுமதிகொடுக்கலாகுங் கதவுகளைத் தவிர 10 அடி அகலத்துக்குக் குறையாத செங்கற் சுவரால் அடைக்கப்பட்டிருக்க வேண்டும். அது தப்பரவாயும் நெருப்புப்பிடிக்கக்கூடிய சாமான்கள் அல்லது ஊத்தை களுசல் வைக்கப்படாமலும் இருக்க வேண்டும்.

## சினமொற்றகிருவ் இயந்திரத்தில் நெருப்புப்பிடியாமல் எச்சரிப்பு.

23. (a) சங்கத்தலைவரிடத்திலிருந்து எழுத்து மூலமாக உத்தரவுபெறாமல் சினமொற்றகிருவ் இயந்திரத்தை அல்லது கருவியை சனங்கள் இருந்து பார்க்கும் அறைக்குள் அல்லது கட்டிடத்துக்குள் வைக்கப்படாது.

(b) இயந்திரம் வைத்திருக்கும் அறை நெருப்புப்பிடிக்கக்கூடாததாயும் மூன்று வாசல்கள் உள்ளதாயும் ஒவ்வொன்றும் 12 இஞ்சு அகலத்துக்கு மேற்படாத அகலம் உள்ளதாயிருக்க வேண்டும். அதில் இரண்டு வாசல் படம் காட்டுகிறதற்கும் மற்றது படம் காட்டுகிற ஆள் பார்க்கிறதற்குமாயிருக்க வேண்டும்.

24. (a) படத்துக்குக்கிட்ட ஆறு அடிக்குக் குறைய ஒரு இடத்தில் அல்லது இயந்திரம் இருக்கும் அறைக்குள் சுருட்டுக் குடிக்கப்படாது.

(b) ஒரு வாளி காய்ந்த மண்ணும் ஒரு கம்பிளியும் இயந்திரம் இருக்கும் அறைக்குள் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

25. காட்சிகாட்டும் வேளையில் இயந்திரம் இருக்கும் அறைக்குள் காட்சி காட்டுகிறவனுட்பட மூன்று பேருக்கு மேலதிகமாக எக்காலத்தில் இருக்கப்படாது.

26. இயந்திர அறை காட்சிகாட்டுகிற கட்டிடத்துக்குள்ளிருந்தால் அந்த இடத்திலிருந்து சுற்றவர ஆறடி தூரத்தில் ஏதும் ஆசனங்கள் போடப் படாது.

27. ஒரு தரத்துக்காட்சிக்குத் தேவையான படங்கள் மாத்திரம் இயந்திர அறையில் அல்லது தட்டியில் வைத்திருக்கலாம். மற்றதுகள் எல்லாம் காட்சிகாட்டும் கட்டிடத்திலிருந்து தூரத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இயந்திரத்தில் போடாத படங்கள் உலோகவகையாற்செய்த பெட்டிகளில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கவேண்டும். இயந்திரத்தில் போடப்படும் படங்கள் கையினால் அல்லது சூத்திரத்தினால் லன்றேணிலிருந்து வரவரச்சுறுளாகச் சுத்தப்பட்டு கல்நாரால் லையின் பண்ணப்பட்ட பெட்டிக்குள் போடப்பட வேண்டும். சங்கத்தலைவர் தேவையென்றால் இயந்திரத்திலிருந்து புறப்படும் காங்கையை அடக்கிறதற்கு இயந்திரத்துக்குமுன் ஒரு கண்ணாடித் தொட்டியில் சீனக்காரத் தண்ணீர் வைக்கவேண்டும்.

28. டைனமஸ் அந்த கட்டிடங்களுடன்சேர்ந்த இயந்திரங்களுடன் காற்று விழக்கூடியவும் நெருப்புப் பிடிக்கக்கூடாதவுமாகிய அறைகளுக்குள் அல்லது கட்டிடங்களுக்குள் வைக்கவேண்டும். அப்படிப்பட்ட கட்டிடங்களை பொதுக்கட்டிடத்திலிருந்தும் ஒன்றிலிருந்து ஒன்றும் செங்கல்சுவர்களாலும் நெருப்புப்பிடிக்கக்கூடாத தனிவிசைகளாலும் பிரித்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட அடைப்பைச்சுற்றி செங்கல் சுவர் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களிற் கட்டியிருக்வேண்டும்.

## காற்று உலாவுதல்.

29. மேற்சொல்லப்பட்ட அறைகள் எங்கும் சங்கத்தலைவருடைய சம்மதிக்கு ஏற்க நல்லாய் காற்றுப்பிடிக்கக்கூடிய விதமாய் செம்மையாய் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட காற்றுவரும் வாசல்கள் எல்லாம் படத்தில் காட்டப்பட்டும் எழுத்தில் குறிக்கப்பட்டுமிருக்க வேண்டும். உடுப்பறைகள் எல்லாம் வெளிச் சுவரில் யன்னல்கள் உள்ளவையாய் இருக்கவேண்டும்.

## போக்குவரவுசெய்கிற வாசல்கள்.

30. அப்படிப்பட்ட கட்டிடங்கள் எல்லாத்திலும் 300 பேரைக்கொள்ளக்கூடிய இடத்துக்கு இரண்டு போக்குவரவுசெய்கிற வாசலும் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 250 தக்கு அல்லது அதில் குறைந்த தொகைக்கு ஒவ்வொன்றாக வாசல் போடப்பட்டிருக்கவேண்டும். எத்தனை ஆட்களை ஒரு இடம் அடக்குமென்பதை கணக்குப்பார்க்கும்பொழுது ஒரு ஆள் நின்று காட்சிபார்க்கக்கூடிய நிலவிசாலத்தையும் இருக்கிறதற்கு விடப்பட்ட விசாலத்தையுங் கவனிக்க வேண்டியது. அதற்காக ஒரு ஆள்நிற்கும் இடம் 1½ அடிச்சதுரமாக அல்லது 2¼ சதுர அடியாக (1′ 6″ × 1, 6″ கணக்குப்பார்க்க வேண்டும்.

31. ஸ்ரேஜ் என்னும் காட்சி மேடையிலிருந்து போக்குவரவு செய்வதற்கு இரண்டு நேர்வழியும் உடுத்தும் அறைகளிலிருந்து போக்குவரவுசெய்வதற்கு ஒரு வழியும் விடப்பட்டிருக்க வேண்டும்.

32. ஒவ்வொரு போக்குவரவுசெய்யும் வாசலும் 5 அடி அகலத்துக்குக் குறையாமலிருத்தல் வேண்டும்; ஆயினும், உடுத்துகிற அறையிலிருந்து போக்குவரவுசெய்யும் வாசல் 4 அடி அகலத்துக்குக் குறையாமல் இருந்தால்போதும் அது நிலமட்டத்திலிருந்து 2 அடி உசரத்துக்கு மேற்படாத ஒரு விறாந்தைக்கு அல்லது ஒரு வெளி நிலத்துக்கு அல்லது பகிரங்க பாதைக்கு போகக்கூடியதாயு மிருக்கவேண்டும்.

33. அதில் ஆட்கள் போக வரப்பாவிக்கும் வாசல் முதலியவைகளில் அதைப்பற்றிச் சங்கத்தலைவரின் திருப்திகரத்துக்கு 7 இஞ்சு பருப்பமுள்ள எழுத்தில் அறிவித்தல் போடப்பட்டிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட அறிவித்தல் கூடுமாகில் நிலமட்டத்திலிருந்து 6 அடி 9 இஞ்சு உசரத்தில் வாசல் முதலியவற்றுக்கு மேலே பிந்தாரிக்கப்பட்டிருக்க வேண்டும். போக்குவரவு செய்யக்கூடாத வாசல்களில் அவை காட்சிபார்க்க வந்திருப்பவர்களுக்கு தெரியக்கூடியவைகளானால் நிலமட்டத்திலிருந்து 6 அடி 9 இஞ்சு உசரத்தில் 7 இஞ்சு அகல எழுத்தில், " இதால் போக்குவரவு செய்யப்படாது " என்று பிந்தாரிக்கப்பட்டிருக்க வேண்டும். போக்கு வரவு செய்யும் வாசல் ஒவ்வொன்றுக்கும் மேலே ஒரு லாம்பு போட்டு அதின் கண்ணாடியில் " போக்குவரவு செய்யும் வாசல் " என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். அவ்விளக்கு மண்ணெண்ணை யல்லாத வேறு எண்ணை அல்லது மெழுகுதிரி விளக்காய் அது கட்டிடத்திலிருக்கும் விளக்குகளுடன் சம்பந்தமில்லாமல் பிறம்பான விளக்காயு மிருக்கவேண்டும்.

34. வெளியே போகும் வாசல்களில் கதவுகள் போடப்பட்டிருந்தால் அக்கதவுகள் வெளியே திறக்கக் கூடியதாயும் உள்ளிருந்து ஒரு தள்ளில் திறக்கக்கூடியதாயு மிருக்கவேண்டும்.

35. உட்பிரவேசிக்கும் கதவுகள் அல்லது கேற்றுகள் எல்லாம் வெளிப்புறமாய் திறக்கக்கூடியதாயு மிருக்கவேண்டும். அதுகள் இருபுறமாய் திறக்கக்கூடியதாயிருந்தால் திறந்த பிறகு ஒரு சுவரில் பூட்டுப்படத்தக்கதாயு மிருக்கவேண்டும். அப்படிப் பூட்டின பிறகு அதைத் திறப்பினால் திறக்கக்கூடியதா யிருக்கவேண்டும்.

36. வெளியே போவதற்குரிய பாதைகளிலிருந்து அல்லது படிக்கட்டிலிருந்து அல்லது தாழ்வாரத்திலிருந்து கட்டிடத்தின் மற்றும் பகுதிகளுக்கும் போகும் கதவுகள் காட்சி பார்க்கிற இடத்திலிருந்து போக்குவரவு செய்யும் ஆட்கள் தெருவுக்குப் போவதாம் பூட்டப்படக்கூடிய விதமாய் வில்லும் போடப்பட்டிருக்கவேண்டும்.

37. எல்லா அடைப்புகளும் தூங்க அல்லது வெளியே திறக்கக்கூடிய விதமாய் செய்யப்பட்ட கொளுக்கிகள் போட்டு இறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

38. எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும்பொழுது ஏதாவது ஏறும் இறங்கும் பாதை, வழி படிக்கட்டு அல்லது இறங்கு மிடங்களைத் தடுக்கா மலிருக்கவும் கைபிடிகள் அல்லது வேறு ஏதாவது பகுதிகளும் 1½ இஞ்சுக்கு மேலே நீண்டிருக்காதபடி போடப்பட்டிருக்க வேண்டும்.

39. மேலே சொல்லப்பட்டவைகளைத் தவிர வேறேதாவது பூட்டுகள் கொளிக்கிகள் அல்லது சிலாகைகள் அல்லது வேறுமேது தடைகள் வாசல்களில் கேற்றுகளில் அல்லது தடையெல்லைகளில் பூட்டப்படாது.

## சாலைகளும் பாதைகளும்.

40. வரிசையிலிருந்து அல்லது தளத்திலிருந்து போகும் பாதைகளும் அல்லது சாலைகளும் 250 பேரைக் கொள்ளக்கூடிய இடத்திலிருந்து போகிறதாயிருந்தால் 5 அடி அகலமாயும் 250 பேருக்குமேலும் 500 பேருக்குக் குறையக் கொள்ளக்கூடிய இடத்திலிருந்து போகிறதாயிருந்தால் 10 அடி அகலமாயு மிருக்கவேண்டும். ஆயினும் 500 பேருக் குட்படக்கொள்ளும் இடமாயும் 3 போக்கு வரவு செய்யும் வாசல்கள் விடப்பட்ட இடமாயு மிருந்தால் சாலைகளும் பாதைகளும் 5 அடி அகலத்துக்கு மேம்படத் தேவையில்லை.

ஒரு வரிசை அல்லது தளம் 500 பேருக்கு மேற்படக் கொள்ளக்கூடியதாயிருந்தால் 500 பேருக்கு மேற்பட்ட ஒவ்வொரு 250 தக்கு அல்லது அதின் பகுதி ஒவ்வொன்றுக்கும் பாதைகளிலும் சாலைகளிலும் 5 அடி அகலம் கூட்டப்பட வேண்டும். கூடுமானால் படிகள் கட்டாமல் சாய்வாய் கட்டிவிடலாம்.

41. எல்லாச் சாலைகளும் பாதைகளும் எப்பொழுதும் வெளியாயிருப்பதுமல்லாமல் அங்கே வருபவர்களுடைய சாமான்கள் வைக்கும் அறையாகப் பாவித்து அல்லது வேறு மேதாவது சாமான்கள் போட்டு தடை பண்ணப்படாது.

42. பாதைகளில் அல்லது சாலைகளிலுள்ள சுவர்களில் நிலத்திலிருந்து 5ந்து அடிக்குள் ஏது விதமான மாடங்கள் அல்லது பிதப்புகள் இருக்கப் படாது.

43. வரிசைகளிலிருந்து போக்குவரவு செய்யுங் கதவுகளுக்குச் செல்லும் படிக்கட்டுகள் 300 பேருக்கு மேலே கொள்ளக்கூடிய இடத்திலிருந்து போகிறதாயிருந்தால் ஒடுக்கமான இடத்தில் 5 அடிக்குக் குறையாத அகலமும் 300 பேருக்குக்கூடக் கொள்ளக்கூடியதாயிருந்தால் ஒடுக்கமான இடத்தில் 7 அடிக்குக் குறையாத அகலமாயு மிருக்கவேண்டும்.

44. எல்லாப் படிக்கட்டுகளில் 11 இஞ்சு அகலமும் 6 இஞ்சு உசரமுமுள்ள படிகளும் படிக்குப் புறத்திப் பொருத்து ஒரு இஞ்சு ஒவ்வொரு பலகைக்கு மிருக்கவேண்டும். அப்படிக் கட்டுகள் சுழரப்படாது 15ந்து படிகளுக்கு மேற்படவாவது 3 படிகளுக்குக் குறையவாவது இருக்கப்படாது.

45. ஏதாவது படிக்கட்டில் ஒரே நேருக்கு 15 படியுள்ள இரண்டு தட்டுக்கு மேற்பட இருக்கப்படாது. ஒரு தட்டிலிருந்து மற்றத் தட்டுக் கடையிலிருக்கிற அகலம் படிகளினுடைய அகலமாயிருக்க வேண்டும்.

46. படிகள் நெடுக ஏறுகிறதற்கும் இறங்குகிறதற்கும் இரண்டு பக்கத்திலும் கைபிடி ஒரே நீட்டாயுள்ளதா யிருக்கவேண்டும். அது சுவரில் லோகவகைக் கம்பிகளால் பூட்டப்பட்டிருக்க வேண்டும். 3 இஞ்சுக்கு மேற்பட அக்கைபிடி படிக்கட்டுக்கு வெளியே வந்திருக்கப்படாது.

47. படிகளின் தட்டிலே திறபடத்தக்கதாக கதவு இருக்கப்படாது. ஆனால் கதவுக்கும் படிக்கு மிடையில் குறைந்த கணக்கு 3 அடி வெளியுள்ள தளம் படிகளுக்கும் கதவுக்கு மிடையே போடப்பட்டிருக்கவேண்டும்.

48. சனங்களிருந்து பார்க்கும் இடத்தில் கைக்கதிரை அல்லது சாய்மணையில்லாத இடங்களில் ஒரு ஆள் இருக்கும் இடம் இரண்டு அடி உசரமும் 1 அடி 6 இஞ்ச விசாலமும் கைக்கதிரை அல்லது சாய்மணையிருக்குமிடங்களில் 2 அடி 4 இஞ்ச உசரமும் 1 அடி 8 இஞ்ச விசாலத்துக்குக் குறையாமலிருக்கவேண்டும். முன்வரிசையிலிருக்கும் ஆசனத்தின் பிற்பகுதிக்கும் பின்வரிசையிலிருக்கும் ஆசனத்தின் முற்பகுதிக்கும் 1 அடி 6 இஞ்ச வெளி நேராய் அளக்கும்போது இருக்கவேண்டும். கட்டிடத்தில் நிலையாய் சேர்ந்தமைக்கப்பட்ட ஆசனங்கள் இல்லாமல் கதிரைகள் பாவிக்கு மிடத்தில் சாய்மணை அல்லது கைக்கதிரையானல் பெட்டிகளைத்தவிர இரண்டு வரிசைகளுக் கிடையில் ஒரு கதிரையின் மத்தியிலிருந்து அடுத்த கதிரையின் மத்திக்கு 1 அடி 8 இஞ்ச அகலமும், கைக்கதிரைகள் அல்லது சாய்மணையில்லா விட்டால் அகலம் 1 அடி 6 இஞ்சாயு மிருக்கவிட்டு 6 கதிரைகளுக்குக் குறையாமல் ஒவ்வொரு துண்டிலும் இருக்கத்தக்கதாய் சேர்த்துப் பிணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

49. இருக்குமிடங்களில் ஒவ்வொரு பகுதிக்குமிடையில் சங்கத்தலைவருடைய திருத்திக்கு 3 அடி அகலத்துக்குக் குறையாத வழி விடப்பட்டிருக்கவேண்டும்.

## வெளிச்சங்கள்.

50. அப்படிப்பட்ட இடங்களில் இலக்ரிறிக் அல்லது காஸ் வெளிச்சம் போடப்பட்டிருந்து அதுகள் பழுதாய்ப்போய்விட்டால் ஆட்களிருந்து பார்க்கும் இடத்துக்கு, சாலைகளுக்கு, வழிகளுக்கு அல்லது போக்குவரவுசெய்கிற வழிகளுக்கும் படிகளுக்கும் நெருப்புப்பிடிக்காத இடத்திலும் சனங்களுக்குத் தூரத்திலும் சங்கத்தலைவர் திருத்திப்படக்கூடிய ஒருவிதமான் எண்ணெய்விழக்கு போடப்படலாம். சனங்கள் அவ்விடத்தி லிருக்குமட்டும் அப்படிப்பட்ட வெளிச்சங்களெல்லாம் கொழுத்தப்பிட்டிருக்கவேண்டும். அப்படிப்பட்ட விழக்குகளில் சரங்க எண்ணெய் விட்டு எரிக்கப்படாது. ஆடி அசையக்கூடிய விழக்குகள் உலோக வஸ்துவாற் செய்த கம்பிகளல்லாத வேறொன்றிலும் தூக்கியிருக்கப்படாது.

51. இலக்ரிறிக் அல்லது காஸ் வெளிச்சம் அல்லது ஏதாவது இலக்ரிறிக் வேலை அல்லது காஸ் குருவி வைக்கமுன் அல்லது இலக்ரிறிக் அல்லது காஸ் வைத்ததில் பழுதுபார்த்தல் அல்லது மாற்றம்செய்யமுந்திச் சங்கத்தலைவருக்கு படமும் மாதிரியும் அனுப்பி சங்கத் தலைவரிடம் எழுத்தில் சம்மதிபெறவேண்டும்.

52. இலக்ரிறிக் அல்லது காஸ் வெளிச்சம் போடுகிறதற்கு உத்தரவுபெற்றபிறகு அவைகள் இக்கட்டளைச்சட்டங்களுக்கு இசைய ஒருதருக்கும் தீங்குவாராவண்ணமும் பழுதடையாவண்ணமு மிருக்கவேண்டும். சங்கத் தலைவர் ஆறுமாதத்துக்கு ஒருதரம் அவ்வெளிச்சங்களைச் சோதித்து அவை பழுதடையாமலிருக்கின்றனவோ என்று எழுத்தில் றிப்போட்பண்ணும்படி ஒரு தகுதியான ஆளை நியமிப்பார். சங்கத்தலைவர் எப்பொழுதென்றாலும் தன் விருப்பப்படி அவ்வெளிச்சங்களைச் சோதினைபண்ணும்படி கட்டளைபண்ணுவார். அவ்விளக்குகள் ஆபத்து நேரிடக்கூடிய விதமாய் போடப்பட்டிருந்தால் அவைகள் திருத்தப்பட்டு திருத்தப்பட்டன என்று எழுத்து மூலமாய்ச் சங்கத்தலைவருக்கு அறிக்கைப்பத்திரம் கொடுக்கும்வரையும் அவர் அவ்விளக்குகளைப் பாவிக்கப்படாதென்று தடைபண்ணுவார். இந்தப் பிரமாணங்களில் வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டிருந்தாலன்றி பிரித்தானிய இலக்ரிறிக் என்ஜினியரும் பொயினிகஸ் நெருப்புக் கந்தோர் சட்டங்களின் பிரகாரம் இலக்ரிறிக் காஸ்தாபகங்கள் செய்யப்பட்டும் நடப்பிக்கப்பட்டும் வரவேண்டும்.

53. நெடும் சேற்கிர்.—இலக்ரிறிக் வெளிச்சம் போடப்பட்டிருக்கும் இடங்கள் எல்லாத்திலும் குறைந்த கணக்கு மூன்று பிறம்பான சேற்கிர் போடப்பட்டிருக்கவேண்டும். A ஸ்ரேஜுக் B யும் C யும் ஆட்களிருந்து பார்க்கும் இடத்துக்கும் சாலைகளுக்கும் போக்குவரவுசெய்யும் பாதைகளுக்கும் சனங்கள் புளங்குமிடங்களுக்கும், சனங்கள் புளங்கு இடத்திலும் சாலைகளிலும் போக்குவரவுசெய்கிற வாசல்களிலும் இருக்கும் அரைவாசி வெளிச்சங்கள் B சேற்கிர்றிலும் மற்ற அரைவாசி C சேற்கிர்றிலும் ஒன்றுவிட்டொன்றாய் இருக்கக்கூடிய விதமாய் B சேர்கிற்றும் C சேர்கிற்றும் போடப்பட்டிருக்கவேண்டும். ஒரு இடத்திலாவது இரண்டு சேற்கிர்றினதும் கம்பிகள் முதலானவை ஒரே பெட்டியில் அல்லது குளலில் அல்லது மூடிகளில் போடப்பட்டிருக்கப்படாது.

54. வெளிச்சங்களுக்கு இலக்ரறிக் கறன்ற் கொடுக்கும் வகை.—மூன்று சேர்கிற்களிருக்குமிடங்களில் சேர்கிற்கள் A, B அல்லது A, C இருக்கும் இடத்துக்கு எதிரே இருந்து கறன்ற் கொடுபடவேண்டும். கூடுமாகில் A சேர்கிற் ப்றௌசீனியம் சுவரில் ஸ்ரேஜ் பக்கத்துக்கும் B யும் சேர்கிற்கள் சனங்கள் இருந்து பார்க்கும் இடப்பக்கத்துக்கு அந்தச் சுவரிலும் வைக்கப்படவேண்டும். ஸ்ரேஜிலிருக்கும் போட் பலகையிலிருந்து சனங்களிருக்கிற இடத்திலிருக்கும் விளக்குகளை தடுக்கிறதாயிருந்தால் (A சேர்கிற்) சனங்களிருக்கும் இடத்திலிருக்கும் B யிலும் C யிலும் ஸ்ரேஜிலிருந்து தொடர்ச்சியில்லாமல் போதிய அளவு வெளிச்சங்கள் இருக்குமாகில் அப்படித் தடைசெய்யலாம். வெளிச்சங்களின் தொகையும் அதுகள் இருக்கும் இடங்களும் சங்கத் தலைவரால் சம்மதிகொடுக்கப்படவேண்டும். 51 ம் உப விதியின் பிரகாரம் சம்மதிகொடுக்கப்பட்ட இடத்தில் அல்லாது கொடுக்கப்பட்ட கறன்ரில் வேறு இடம் அல்லது அதின் எந்தப் பகுதியாவது கொளுத்தப்படாது.

55. (1) கொன்டக்ரர்கள்.—அவ்விடத்திலிருக்கும் கொண்டக்ரர்கள் எல்லாம் 1899 ம் ஆண்டின் கொப்பர் கொன்டக்ரர்களைப்பற்றிய கூட்டத்தில் தெரிவித்த பிரகாரம் 100 பங்கு மத்தனஸ் செம்புப் பூச்சால் பூசப்பட்டும் கறன்ற் போகும் குணமும் இருக்கவேணடும் ($\frac{1}{81}$) எஸ். டபிள்யு. ஜீ. நொம்பரில் குறித்திருக்கும் சதுரங்கத்துக்குக் குறைந்த கொன்டக்ரர் பாவிக்கப்படாது. ($\frac{1}{81}$) எஸ். டபிள்யு. ஜீ. நொம்பருக்கு மேற்பட்ட கொன்டக்றர்கள் போடப்படாது. கறன்றுடைய அடர்த்தி ஒரு சதுர இஞ்சக்கு 1,000 அம்பர்களுக்கு மேற்படக்கூடாது.

(2) வேறாக வைத்தல்.—கொன்டக்றர்கள் எல்லாம் சீலை சுற்றியதும் தகுந்ததும் பெலமாய் நின்றுபிடிக்கக்கூடியதுமாக சுத்தப்பட்டும் சணல் சுற்றிய றபர் குளல்களில் அந்நேரத்தில் இயன்ற மாதிரி கவனமாய் போடப்பட்டு புறம்பாக்கி வைக்கப்படவேண்டும். புறப்படுத்திவைக்கப்படும் கொன்டக்றரின் பெலம் ஒரு கட்டைக்கு 600 மேகோம்சுக்கு மேற்படக்கூடாது.

(3) எல்லாக் கொன்டக்ரர்கள் தீங்கு விளையாவண்ணம் பாதுகாக்கப்பட்டு யாதாகுதல் ஒரு இடத்தில் சுவருக்கால், நிலத்துக்கால் அல்லது சீலிங்குக்கால் போறதாயிருந்தால் மினுக்கமான கல்லு அல்லது மண் குளல்கள் அல்லது ஏதும் சங்கத் தலைவர் சம்மதிகொடுக்கக்கூடிய வழிவகைக்ள் பாவிக்கப்படவேண்டும்.

முகடுகளுக்கு உசரத்திலும் அவ்வித இடக்களிலும் 100 வேல்ருக்கு மேலே மின்சார சக்தி உண்டாகத்தக்கதாக இருந்தால் பீங்கான் மாதிரியானவைகளில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். ஈரமான இடங்களாயிருந்தாலும் அப்படிப்பட்ட கோப்பைத்தட்டுகளில் $\frac{1}{16}$ அல்லது $\frac{1}{16}$ அல்லது அதற்குச் சரியான மொத்தமான கம்பிகள் பூட்டுகிறதாயிருந்தால் அக்கோப்பைகள் 18 இஞ்ச தூரத்துக்கு மேற்படாமல் வைக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படியேகூட மொத்தமான கம்பிகளுக்கு ஈவின்படி தூரம் கூடவேண்டும்.

(4) வளையக்கூடியதுகள்.—வளையக்கூடிய கொன்டக்றர்கள் 25 ம் நம்பர் எஸ். டபிள்யு. ஜீ. க்கு மெல்லிய கம்பிகளால் செய்யப்பட்டிருந்தால் தகரம் பூசாத பித்தளையாயிருக்கவேண்டும். மொத்தமாயிருந்தால் தகரம் சேர்ந்த கம்பிகளாயிருக்வேண்டும். அக்கம்பிகள் இந்தியா றபரால் அல்லது வல்கனைஸ்ட் இந்தியா றபரால் மூடப்பட்டும் ஒரு கட்டைக்கு 600 மேகோம் எதிர் பெலமுள்ளதாயும், தேள்வையென்றால் வெளியே பெலகை மாட்டப்படும் றபர் குளல் போடப்பட்டும் இருக்கவேண்டும். உதாரணமாக ஒசேன்றிருவில் அப்படி இருக்கவேண்டும். வளையக்கூடிய கொன்டக்றர்கள் பழுதாய்ப் போய்விட்டால் உடனே வேறொன்று போடப்படவேண்டும். 22 எஸ். டபிள்யு. ஜீ. பருப்பத்துக்கு குறைந்த வளையக்கூடிய கொன்டக்றர்கள் பாவிக்கப்படாது.

56. சேற்கிர்கள்.—எல்லா விஷயத்திலும் லோகங்களால் செய்யப்பட்ட சேற்கிர்கள் பாவிக்கப்படவேண்டும். காஸ் அல்லது தண்ணீர் பைப்புகள் இலக்ரிக் சேற்கிர் குடன் சேர்க்கப்படாது. A. B. C. என்னும் பெரிய சேற்கிர்கள் தேவைஎன்றளவு சின்னப் பிரிவுகளாக பிரிக்கப்படலாம். சாலைகளில் அல்லது ஆட்களிலிருந்து பார்க்கும் இடத்திலிருக்கும் சின்ன சேற்கிர்கள் 5 அம்பருக்கு மேலே கொண்டுபோகக்கூடாததாக லாம்புகள் பிரிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் ஸ்ரேஜில் 20 அம்பர் கொண்டுபோகக்கூடியதாயும் பிரபிக்கும் பலகையிலிருந்து துவங்கவும் வேண்டும். வில்லு வளைவான லாம்புகளுக்கும் வேறு வெளிச்சங்களுக்கும் ஒரு சேற்கிர் பாவிக்கப்படாது. வெளிப்புறத்திலிருக்கும் வெளிச்சங்கள் உள்புறத்திலிருக்கும் வெளிச்சங்களோடு யாது தொடசல் இருக்கப்படாது. வெளியேயிருக்கும் சின்ன சேற்கிர்கள் 20 க்கு மேற்படாத அம்பர் கொண்டுபோகலாம். மூச்சுக்காகப் பாவிக்கும் சேற்கிர்கள் வெளிச்சங் கொழுத்தும் சேற்கிர்களிலிருந்து புறம்பாக்கப்பட்டிருக்கவேண்டும். சேற்கிர்கள் எல்லாத்துக்கும் ஒரு தடியில் திரிபோடப்பட்டும் ஒரு அறைக்கு இரண்டு போடப்படாமலு மிருக்கவேண்டும். 5 அம்பருக்கு மேற்படாமல் கொண்டுபோகும் சேற்கிர்கள் எல்லாத்துக்கும் ஒரு தடியில் ஒரு சுவிர்ச போதும், ஆனல் 5 அம்பருக்கு மேலே கொண்டுபோகிறதற்கு இரட்டைக் கம்பும் சுவிர்சம் போடப்பட்டிருக்கவேண்டும். சினமொற்றகிறாவ் வில்லு வட்டங்கள் எல்லாம் இரட்டை தடித் சுவிர்ச் போடப்பட்ட புறம்மான சேற்கிர் போடப்பட்டிருக்கவேண்டும்.

57. பொருத்துகள்.—சங்கத்தலைவருடைய அனுமதி இல்லாமல் பொருத்துகள் கம்பியில் அல்லது கேபிளில் செய்யப்படாது. எங்கே ஒரு பொருத்து பாவிக்கவேண்டுமோ அங்கே பொருத்துப் பெட்டிகள் பாவிக்கவேண்டும். அப்படிப்பட்ட பெட்டிகள் பீங்கான் மண்ணால் அல்லது வேறுமேது தகுந்த சாமானல் செய்யப்பட்டு தட்டைகளில் பூட்டப்பட்டும் பொருத்துகள் சொன்ன விதத்தில் செய்யப்பட்டு மிருக்கவேண்டும்.

58. கற் அவுர்ச்சுகள், மற்றும் ஸ்தாபனங்கள் முதலியன.—(1) எல்லா சேற்கிர்களும் பிரபிக்கும் பலகையில் திரி போடப்பட்டு அதைச்சேர்ந்த ஆட்கள் தொடக்கூடியதாயும் வேறுமொருத்தர் தொடக்கூடாத விதமான இடங்களிலிருக்கவேண்டும். திரும்பவும் போடக்கூடிய மாதிரி உள்ள திரிகளை உபயோகிக்கவேண்டும். எரிந்த இய்யம் விளுந்து சேற்கிர்களைச் சின்னன் ஆக்காமலும் நெருப்புப்பிடியாவண்ணமும் கற்அவுற்ச் செய்யப்பட்டிருக்கவேண்டும். எல்லா அந்தலைகளும் பாஸ்பண்ணுகிற கரன்ரை சூடாக்காதவண்ணம் போதிய மொத்தமாயிருக்கவேண்டும். எல்லா கற் அவுற்சுகளும் எந்த சேற்கிர்ருக்கு அல்லது எந்த லாம்பை அடக்கிறதென்பதைக் காட்டக்கூடியவிதமாய்ச் செய்யப்பட்டிக்கவேண்டும்.

(2) பூட்டுகள், சுவிர்ச், திரி, மூடிகள் முதலிய மூடப்படாத லோகவகையால் செய்யப்பட்டதுகளெல்லாம் சேற்கிர்களிலிருந்து மின்சாரம் செல்லாதபடியிருக்கவேண்டும் சுவிர்சுகள், கற் அவுர்சுகள் சீலிங்றோஸ், நிலத்து அல்லது சுவர் சொக்கொற்கஸ், லாம்பைத் தாங்குகிறவைகள், எல்லாம் நெருப்புப் பிடிக்கக்கூடாத தாளிகளும் மூடிகளும் உள்ளவையாயிருக்கவேண்டும். சுவிர்ச்சுகளும், கற்அவுர்சுகளும் தூரத்திலே போடப்பட்டு வட்டமாய் வாமல் தடுக்கத்தக்கதாய் செய்யப்பட்டிருக்க வேண்டும். லாம்புத்தாளிகள் எல்லாம் பயனர் சோக்கற் மாதிரியாய் அல்லது சம்மதம்கொடுக்கப்பட்ட மாதிரியாகச் செய்யப்பட்டிருக்கவேண்டும். பீங்கான் மண்ணில் செய்யப்பட்ட அல்லது வேறுவிதமான பிடிக்கும் சாமான்கள் தடிகளுக்கிடையே போடப்பட்டு மிருக்கவேண்டும். கொளுத்துவதைக் காட்டும் இடத்துக்கும் நூற்கிறதைக் காட்டும் இடத்துக்கும் இடையே சிற்காவண்ணமும் நெருப்புப்பிடியாவண்ணமும் வில்லுப்போன்று அல்லது சின்ன சேற்கிர் இல்லாவண்ணமும் கறன்ர் போகக்கூடிய அளவு பருப்பமாயும் சுவிர்சுகள் போடப்பட்டிருக்கவேண்டும்.

(3) சொன்னவிதமாய் புணைச்சல்கள் இருக்கக்கூடியவிதமாய் செய்யப்படும் எந்த இடத்திலாவது அப்படிப்பட்ட புணச்சல்கள் வழுவி தீங்குவிளைவிக்காமலும் கவனிக்கவேண்டியது. இலக்றிக்கும் காசம்சேர்ந்த புணர்ச்சல்கள் பாவிக்கப்படாது. சுவிர்ச்சும் திரிபலகைகளும் முற்பக்கத்தில் புணர்ச்சல் இல்லாவிட்டால் பிற்புறத்தில் சுகமாய் புணர்ச்சல் போடக்கூடிய விதமாயும் முன்னுக்கும் பின்னுக்கும் இருக்கும் தடிகளுக்கிடையே வெட்டுகளும் இரும்புக் கம்பிகளால் பாதுகாக்கப்பட்ட கண்ணாடி போடப்பட்ட (கண்ணாடி போதியளவு தடிப்பம் இல்லாவிட்டால்) பூட்டும் பெட்டியும் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

## பிரபிக்கும் பலகைகளைக் கொளுத்தும் விதம்.

59. 8 கன்டில் பவருள்ள லாம்பு ஒன்றை ஒவ்வொரு பிரபிக்கும் பலகைக்கும் மேலே வைக்கக்கூடிய ஒரு முக்கை யிருக்கவேண்டும். அவ்விளக்கு புறம்பான சுவிர்சில் பூட்டப்பட்டும் அதின் தனித்தனி திரிபஸ்பாரயுடன் சேர்க்கப்பட்டு மிருக்கவேண்டும்.

## அடைத்துப் பூட்டி வைத்தல்.

60. பெட்டிபோடுகில் அது சுவரிலிருந்து ஒரு கல்லிடையால் பிரிக்கப்பட்டும் பெலனுள பலகையாயுமிருக்கவேண்டும். ஒவ்வொரு கொன்டக்ரரும் வெவ்வேறான வெட்டுகளில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். வேறுவிதமாய்ச் செய்யில் உத்தரவு முன்னே பெற்றுக்கொள்ளளவேண்டும். எதிர்த்த துருவாபி முகத்தைஉள்ள கம்பிகளை ஒரு வெட்டில் வைக்கப்படாது. A. B. C. என்னும் வித்தியாசமான சேற்கிர்களைச் சேர்த்து துருவாபி முகத்தையும் சேர்க்கப் படாது. பெட்டி தெரியக்கூடிய இடத்தில் வைக்கவேண்டும். கொன்டக்றர்கள் எப்பொழுதும் எட்டக்கூடிய இடத்திலிருக்கவேண்டும். காலநிலையினுல் அல்லது தண்ணீர் ஒழுகுவதினுல் தீங்குவிளையக்கூடுமென்று கண்டால் பெட்டிகள் உபயோகிக்கப்படாது.

## ஸ்ரேஜ் வெளிச்சங்கள்.

61. (1) பலகைக்குப் பின்னுலே சுவிர்சுபோட் சேர்க்கப்பட்டிருந்தால் சுவருக்கும் பலகைக்குமிடையில் 3 அடி தூரத்துக்குக் குறையாமல் வெளியிருக்கவேண்டும் அல்லது திம்பிளும் கொனக்சனும் எப்பொழுதும் எட்டக்கூடிய மாதிரியாய் தேவையானஅளவு ஈவுவிடவேண்டும் அல்லது அந்தப்பலகையின் பிறப்பக்கத்துக் கொனக்சனை உடைக்காமலும் பலகையைப் பழுதாக்காமலும் எட்டக்கூடியதாயும் இருக்கும்படி பலகைகளைத் தூங்கச்செய்தும் வட்டமாயும் வைத்தும் இருக்கலாம். சேற்கிற்களோடு சேர்ந்த உலோகங்களால் செய்யப்பட்ட வாகனை திறந்தும் சின்ன வரியையும் உண்டாக்கக்கூயதாயிருக்கப்படாது.

(2) விளக்குகள் அல்லது பாரனஸ், நிலத்தில் வைக்கும் காஸ்வெளிச்சங்கள் பெலனுள கம்பிகளால் பவுத்திரப்படுத்தப்பட்டு சோடினைகளோடும் நெருப்புப்பிடிக்கக்கூடிய சாமான்களோடும் லாம்புகள் முட்டாதபடி ஒழுங்குபண்ணவேண்டும். விரைவாக நெருப்புப்பிடிக்கக்கூடிய சாமான்கள் லாம்புகளோடு முட்டக்கூடியவிதமாய் போடப்படாது. தகுதி என்று சொல்லப்பட்ட பெலனுள மரத்தையே விளக்குகளுக்குச் சேர்ப்பதில் பாவிக்கவேண்டும். எல்லா மரத்தண்டும் நெருப்புப்பிடியாமல் இருப்பதற்கு இரண்டு கொன்டக்ரருக்கு இடையில் அல்லது எந்தக் கொன்டக்ரரிலிருந்து அல்லது அதின் பகுதியிலிருந்து சூடெழும்பும் இடத்தில் வில்லுவளைவான வஸ்துக்களால் நெருப்புப்பிடியாவண்ணம் மூடப்பட்டிருக்கவேண்டும்.

(3) நிலத்தில் காஸ்வெளிச்சத்தைப்போன்ற அல்லது பர்ன்சைப்போன்ற ஒரு தொகை வெளிச்சங்கள் ஒரு சுவிர்சில் தொடுக்கப்பட்டிருந்தால் கொன்டக்றர்கள் உத்தரவு கொடுக்கப்பட்ட இடத்தில் போடப்பட வேண்டும்.

(4) பர்ரன்ஸ் என்னும் மரத்தண்டுக்கு வீட்கள் சந்திக்கும் இடத்தில் விசேஷமாய் மூடப்பட்டிருக்க வேண்டும். பர்ரன்ஸ் என்னும் மரத்தண்டின் அசைவினுல் அந்த வீட்களுக்கு தீங்குவிளையாதபடி போதியளவு நீளம் இருக்கவேண்டும். வீட்களின் இப்பகுதியைத் தோலினுல் அல்லது தண்ணீர் உள்ளுக்குப் போகாத கன்வசினுல் நல்லமாதிரியாய் பாதுகாக்கப்பட்டிருக்கவேண்டும். பர்ரன்ஸ் எல்லாம் அதிலிருக்கும் இன்சலேற்றர் மூன்று கயிறுபோன்ற கம்பிக்கயிறுகளால் தூங்கவிடப்பட்டிருக்கவேண்டும். எந்த நியாயத்தினுலாவது காஸ்வெளிச்சத்துக்கும் இலக்றிக் வெளிச்சத்துக்கும் ஒரே பர்ரன்ஸ் உபயோகிக்கப்படாது. சுவரில் இருக்கும் தொளைகளும் மூடிகளும் நல்லதென்று கண்ட பெலனுள வேலைசெய்ததா யிருக்கவேண்டும்.

## வில்லு லாம்கள்.

62. விசேஷ உத்தரவு இல்லாமல் காணிகளில் வில்லுவளைவாய் லாம்புகள் வைக்கப்படாது. பாவிக்கும்பொழுது கண்ணுடி அல்லது நெருப்புப் பிடிக்கக்கூடிய காபன் துண்டுகள் விளுந்து தீங்குநேரிடாதபடிக்கு விசேஷமாய் கவனம்செய்யவேண்டும். விளக்குகளையும் லாந்தர்களையும் புணர்ச்சல்களையும் அதோடுசேர்ந்த அதில் வேலைசெய்பவர் அல்லாத மற்றவர்களால் தொடக்கூடிய உபகாரணங்களையும் கவனமாய் அப்புறப்படுத்தி வைக்கவேண்டும் வில்லுலாம்புகள் ஒருபோதும் கொன்டக்ரரில் தூங்கவிடப்படாது.

63. எதிர்ப்பு.—வெளிச்சத்தின் காங்கையையும் மோட்டோர் வலிமையையும் அல்லது வேறெந்த தேவைக்காவதல் ஒழுங்குசெய்யும் இயந்திரத்தை நெருப்புப்பிடியாத ஓர் ஆசனத்தில் வைக்கவேண்டும். அதை நெருப்புப்பிடியாத வஸ்துகளிலிருந்து அவ் யந்திரத்தின் எப்பகுதியாவது உடைந்துவிழுங் காலத்தில் நெருப்புப் பிடிக்கக்கூடிய சாமானில் விளாமல் அல்லது நெருப்புப் பிடிக்கக்கூடிய சாமான் அவ் யந்திரத்தில் விளாதபடி அவ்யந்திரத்தை தூரத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருக்கவேண்டும். அதைப்புக்காக என்னவும் தண்ணீர் பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்தால் அதுகள் சரியான தட்டத்தில் அல்லது ஸ்ரான்டில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

64. இன்சலேசன் அதைப்பு—எல்லா லாம்புகளும் கொளுத்தப்பட்டிருந்தால் கொன்டக்ரரில் அளிமதியாகப் போகும் கறன்ற் லாம்புகளில் மோட்டோர்களில் சிலவளிக்கிறதில் 1/10,000 பகுதிக்கு மேற்படக்கூடாது. இது சோதித்துப்பார்க்கும் விதம் இ. எம். எவ். விதந்தான். 10,000 ஓம்சுக்கு கீழ்ப்பட்ட இன்சலேசன் அதைப்பைச் சரியென்று சொல்ல இந்த உபவிதியை எடுக்கப்படாவிட்டால்.

65. மேற்பார்வை.—நன்ருய் வேலைதெரிந்தவர்களிடமே சுவிர்சின் கியர் ஒப்பிக்கப்படவேண்டும்.

66. மோட்டோர்.—மோட்டோர் யந்திரம் உத்தரவு கொடுக்கப்பட்டால் நிபந்தனைகளுக் குட்படவேண்டும். இலக்றிப்பான் அதைப்போன்ற 300 வற்றுக்கு மேற்படாத இயந்திரங்கள் நல்ல பிரபிக்கும் பலகையில் திரிகளுடன் புறம்பாய் அறைந்துவைத்திருந்தால் பாவிக்கலாம்.

## கம்பி அடிக்கும் மாதிரி.

67. அவ்விடத்தின் மனேசரின் கந்தோரில் ஒரு விசேஷமான இடத்தில் கம்பிகள் அடிப்பதின் பிளான் ஒண்டிருக்கவேண்டும். அது காலத்துக்குக் காலம் தேள்வையென்று காணுகிறபடி திருத்தப்படவேண்டும்.

## கொஞ்சக்காலத்துக்குக் காந்தத்தை வைத்தல்.

68. கொஞ்சக்காலத்துக்காக இலக்றிகல் இன்சலேசன் வைக்கில் சங்கத்தலைவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்த உத்தரவுபெறவேண்டும்.

69. நிலையாய் வைக்கப்பட்டிருக்கும் இன்சலேசனைப்போல புதுக்கப்போடப்பட்ட இன்சலேசன் சரியாய் பூட்டப்பட்டும், சனங்கள் இருக்கும் இடத்துக்குக்கிட்ட இருந்தால் பெட்டியில் பூட்டியுமிருக்கவேண்டும். ஏழு நாளைக்குமேல் பாவிக்கிறதென்றுல் எல்லாப் பொருத்துக்களும் லோஹவஸ்துக்களை பற்றவைக்கும் பொடி பூசப்பட்டிருக்க வேண்டும். ஆனுல் 7/20 பெரிதான இன்சலேசன்கள் எத்தனை நாளைக்குப்பாவித்தாலும் லோஹவஸ்துக்களைப் பற்றவைக்கும் பொடி பூசப்பட்டிருக்கவேண்டும். எல்லா இடத்திலும் பொருத்துகள் மூடப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனுல் ஏற்கப்பட்ட பொருத்துகள் அல்லது சேர்க்கும் பெட்டிகள் பொருத்துகளுக்காகப் பாவிக்கலாம்.

70. சேற்கிர்கள் கூடியஅளவு சின்னப்பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட வேண்டும். ஆனுல் சினமொற்றகிருவில் பாவிக்கும் வீட்டவிரியைத்தவிர மற்ற சின்ன வரிகள் 10 அம்பருக்கு மேற்படக்கூடாது. இரண்டு திரிபோட்ட சுவிர்சால் அடக்கக்கூடியதாயு மிருக்கவேண்டும்.

71. தற்பாவிப்புக்காகப் போடப்பட்ட வேலைகள் எல்லாம் மூந்த சம்மதி கொடுக்கப்பட்ட அலுவல் முடிந்தவுடன் களட்டுப்பட வேண்டும். கொஞ்சக்காலத்துக்காகப் போடப்படும் இலக்ரிறிக் கருவிகள் மூன்று மாதங்களுக்குமேல் பாவிக்கப்படாது.

72. கொஞ்சக்காலத்துப் பாவிப்புக்காகப் போடப்படும் இலற்றிக்கருவிகளைப்பற்றி சங்கத்தலைவர் கொடுத்த சம்மதியுடன் ஒவ்வொரு இடத்திலும் தேவையான விசேஷ நிபந்தனங்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். நெடுங்காலத்துக்குப் பாவிக்கும் கருவிகளைப்பற்றிய 52 ம் சட்டம் கொஞ்சக்காலத்துக்குப் பாவிக்கிறதையும் அடக்கும்.

## லைம்லையிற்.

73. லைம்லையிற் பாவிக்கும் இடத்தில் கீழ்க்குறிக்கும் நிபந்தனங்கள் கவனிக்கப்பட வேண்டும் :—

(a) சிலின்டர்கள் எல்லாம் சங்கத்தலைவருடைய திருத்திக்குச் சோதனைபண்ணும்பொழுது 224 சதுரங்க காற்றதைப்பு உள்ளதாயிருக்க வேண்டும். அப்படிப்பட்ட சோதினை அவர் தேள்வையென்று காணும்போதெல்லாம் நடக்கும்.

(b) கைடரோசனும் கோல்காஸ் சிலிண்டர்களும் தொடுக்கிறதற்கு வழக்கமான இடது கையால் திரிக்கப்பட்ட கயிறு பாவிக்கப்பட்டும் சிவப்புமை பூசப்பட்டு மிருக்கவேண்டும்.

(c) ஏற்றுக்கொள்ளப்படுவதும் தீங்கு விளைவிக்கக்கூடாததுமாகிய இயந்திரத்தின் வேகத்தை சரிப்படுத்தும் சாதனங்களுக்குள்ளே எல்லா சிலின்டர்களும் பாவிக்கப்பட வேண்டும்.

(d) இரும்புக்குளல்களால் அல்லது வெளிப்பக்கம் கன்வஸ்சீலையும் கயிறுபோன்ற சீலைகளால் சுற்றப்பட்டதாயும் லன்ரேனின் அல்லது அதற்கு அணிவிலிருக்கும் வெறென்னத்தினுடைய அசைவினுல் தாக்கப்படாததாய் செய்யப்பட்டிருக்கிற றபர் குளல்களால் எல்லா சிலின்டர்களும் செவ்வையாய் தொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(e) சங்கத்தலைவரால் அல்லது அவரால் உத்தரவுகொடுக்கப்பட்டவரால் தகுந்தவர் என்று எண்ணப்படும் ஒருவர் வசம் இயந்திரங்கள் ஒப்பிக்கப்பட வேண்டும்.

(f) பாரமுள்ள சிலிண்டர்கள் மூலமாய் அல்லாமல் காஸ் பாவிக்கப்படாது. சாக்குகள் ஒருகாலும் பாவிக்கப்படாது.

74. காஸ் பாவிக்கும் இடங்களில் கீழ்க் குறிக்கும் நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டும்:—

(a) நிலத்தில் வைக்கும் வெளிச்சம் அல்லது மிதப்புகள் கம்பிகளால் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும்.

(b) பக்கங்களிலிருக்கும் காஸ் லாம்புகளின் வரிசைகளும் நிரைகளும் இரும்புக்கம்பிகளால் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட விளக்குகள் ஸ்ரேஜின் மட்டத்திலிருந்து 4 அடி தூரத்தில் துவங்கவேண்டும்.

(c) அடைக்கும் கருவிகள் எல்லாம் மூன்று கயிற்றுக்கம்பிகளால் தூக்கப்படவேண்டும். பிற்பக்கத்தில் பெலனுள லோகத்தால் மூடப்பட்டிருக்க வேண்டும். கம்பிகள் காஸ் எரிகிற இடத்திலிருந்து கொஞ்சத்தூரத்தில் சோடினைகளில் நெருப்புப்பிடியாமல் இரும்புச்சட்டத்தில் பூட்டப்பட்டிருக்க வேண்டும்.

(d) அசைவுள்ள வெளிச்சங்கள் வளையக்கூடிய குளாய்களால் மூடப்பட்டிருக்க வேண்டும். அப்படியான குளல் அல்லது ஸ்ரேஜிலிருக்கும் ராப் வழியாய் காஸ் வெளியேபோகப்பண்ணக் கூடியதாயு மிருக்கவேண்டும்.

(e) எல்லா வளையக்கூடிய குளல்களும் வெளிக்காற்றுப் பாரத்தைத் தாங்கக்கூடியதா யிருக்கவேண்டும்.

(f) சன்பேனர் அப்படிப்பட்ட இடங்களில் இருந்தால் அது ஸ்ரேஜில் இருந்தே கொளுத்தக்கூடிய விதமாய் பூட்டப்பட்டிருக்க வேண்டும்.

## கக்கூசுகள்.

75. ஆண்பிள்ளை பெண்பிள்ளைகளுக்கு வெவ்வேறையாக கக்கூசம் ஆண்பிள்ளைகளுக்கு சலம்விடும் இடமும் கட்டப்பட்டிருக்க வேண்டும். பிர்தாரிக்கிறவர்களுக்கும் பாட்டுக்காறருக்கும் தேவையான இடம் விடப்பட்டிருக்க வேண்டும்.

## லயிற்கொன்டக்றர்.

76. அப்படிப்பட்ட காணிகளில் சங்கத்தலைவர் தேவையென்றால் அவருடைய திருத்திக்கு லயிற்றிங் கொன்டக்றர் போடப்பட்டிருக்க வேண்டும்.

## காட்டும் காட்சியின் மாதிரி.

77. (a) சங்கத்தலைவர் பிரசித்த காட்சி நடக்கப்போகிறதென்பதையும் அப்படிப்பட்ட காட்சி உத்தரவில்லாமல் நடத்தப்படக் கூடாதென்பதை அறியவரும்பொழுது பிரசித்த அறிவித்தலால் அப்பட்டிப்பட்ட காட்சியை உத்தரவு எடுக்கும் வரையும் தடைபண்ணிவைக்க இயலும்.

(b) 77 (a) ம் சட்டத்தின் பிரகாரம் தடைபண்ணப்பட்டிருக்கும் காட்சிகளை நடத்தப்பிரியப்படுகிறவன் சங்கத்தலைவரிடமிருந்து உத்தரவு கேட்கலாம். ஆனால் அப்படிப்பட்ட உத்தரவுகொடுக்கமுன் யாராகுதல் அப்படிப்பட்ட காட்சியை நடத்த அல்லது நடப்பிக்கக்கூடாது. உத்தரவு கேட்கிற ஆள் விண்ணப்பத்தில், காட்டப்போகிற காட்சியின் விவரமும் ஆளினுடைய பேரும் மேல்விலாசமும் சங்கத்தலைவர் கேட்கும் வேறும் விவரங்களும் காட்டவேண்டும்.

78. விண்ணப்பம் கிடைத்தவுடன் சங்கத்தலைவர் தான் அல்லது தன்னால் நியமிக்கப்படும் ஒரு ஆளுக்கு காட்டப்போகிற காட்சியைக் காட்டும்படி அல்லது தெளிவாக விளங்கப்படுத்தும்படி கேட்பார்.

79. 77 ம் சட்டத்தில் காட்டியிருக்கும் விண்ணப்பத்தையும் 78 ம் சட்டத்தில் காட்டியிருக்கும் காட்சியை அல்லது விவரத்தையும் பார்த்தபிறகு சங்கத்தலைவர் அவருடைய விருப்பப்படி உத்தரவுகொடுப்பார். அப்படிக் குறித்த உத்தரவுகொடுக்கப்பட்டால் B என்னும் மாதிரிக் கடுதாசியில் கொடுக்கப்பட்டு காட்சியின் மாதிரியும், காட்சிக்குப் பொறுப்பாயிருக்கிற ஆளின் பெயரும் இடமும் என்ன நேரத்துக்குள்ளும் என்ன நிபந்தனைகளுக்குட்படவும் காட்டப்படும். ஒரு காட்சி காட்டுகிறதற்காக உத்தரவுகொடுக்கப்பட்டிருந்தால் யாராவது அதில் குறித்திருக்கும் நிபந்தனைகளுக்கு எதிராக வேறு காட்சிநடத்த அல்லது நடப்பிக்கப்படாது.

80. 79 ம் சட்டத்தின்படி கொடுக்கப்படும் உத்தரவு சங்கத்தலைவருடைய விருப்பப்படி எந்த நேரத்திலாவது தடுத்துவைக்க அல்லது அழிக்க அல்லது திருத்தவும் கூடும்.

81. சங்கத்தலைவர் யாராகுதல் ஒரு காட்சியைக் காட்டுகிறவர் அல்லது ஒரு காட்சியைக் காட்ட விரும்பினால், லைசன்ஸ் எடுத்திருந்தால் அவரை அல்லது அவரில் ஒருவரை அல்லது பலரை தனக்கு அல்லது தான் நியமிக்கு மின்னுமொருத்தருக்கு காட்டின அல்லது காட்ட இருக்கிற காட்சியை அல்லது அதின் எப்பகுதியாவது காட்டும்படியும் தனக்கு அல்லது தன்னால் நியமிக்கப்படுபவர்களுக்கு அக்காட்சியின் அல்லது அதின் எப்பகுதியின் விவரத்தையும் கொடுக்கும்படி கேட்கலாம்.

82. சங்கத்தலைவர் எழுத்தில் எவ்விடத்துக்குக் கொடுத்த லைசன்ஸ் பெற்றவரை அல்லது வேறெவரையாவது எந்த நேரத்திலும் வேறு பிரசித்த காட்சியை அல்லது அதின் எப்பகுதியையும் தடுக்கலாம். அக்காட்சியை அல்லது அதின் பகுதியையாவது காட்டுகிறதற்கு அவசரமென்று காணும் நிபந்தனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கமையக் கொடுப்பார்.

## ஆட்கள் அதிகப்படாமல் தடைகள்.

83. (a) கட்டிடத்துக்குள் ஆட்கள் நிரம்பினவுடன் அவ்விடத்துக்கு வெளியே அதைப்பற்றிய அறிவித்தல் போடப்படவேண்டும். 83 (b) ம் சட்டத்தின் பிரகாரம் நிற்கக்கூடியவர்களைவிட மேலதிகமானவர்களை லைசன்ஸ் பெற்றவர் விடப்படாது.

(b) அதற்கென்று குறிக்கப்பட்ட இடங்களில் அல்லாமல் வேறு இடங்களில் ஆட்கள் நிற்கப்படாது. போக்குவரவு செய்யும் வாசல்களையும் தடைபண்ணக்கூடிய விதமாய் நிற்கவும்படாது.

## பூட்டப்படும் நேரம்.

84. எந்த விசேஷ தினத்திலாவது ஒரு காட்சியும் சங்கத்தலைவருடைய விசேஷ உத்தரவுபெற்றல்லாமல் இரா ஒரு மணிக்குப்பின் நடத்தப்படாது.

85. முதலாளியார் மதுபானம் பாவித்தவனை இந்த இடத்தில் நிற்க அல்லது உட்பிரவேசிக்க விடப்படாது.

## சோதனைபண்ணுகிறதற்கு உட்பிரவேசிக்கும் வழிவகைகள்.

86. இக்காணிகளைச் சோதித்து குறிக்கப்பட்ட சட்டங்கள் கவனிக்கப்படுகிறதோ வென்பதைப் பார்க்கிறதற்கு சங்கத்தலைவரால் அல்லது கண்டி பொலிஸ் சுப்பிறின்ரென்டனால் எழுத்தில் உத்தரவு கொடுக்கப்பட்டவர்களுக்கு உள்ளே போய்ப் பார்ப்பதற்கு விடவேண்டும்.

## தண்டனைகள்.

87. குறிக்கப்பட்ட உபவிதிகளை அல்லது சங்கத்தலைவருடைய கட்டளையை அல்லது தடையை மீறி நடப்பவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

(a) 50 ரூபாவுக்கு மேற்படாத குற்றமும், குற்றம் நெடுகே நடந்தவந்தால் அது நடக்கும் ஒவ்வொரு நாளைக்கும் 25 ரூபாவுக்கு மேற்படாத தெண்டமும்.

(b) சங்கத்தலைவரிடமிருந்து எழுத்தில் மீறி நடப்பதைத் தடுக்கும்படி அறிவித்தல்பெற்ற பிற்பாடு குற்றம் நடந்தவந்தால் ஒவ்வொரு நாளைக்கும் 25 ரூபாவுக்கு மேற்படாத தெண்டமும் கொடுக்கவேண்டும்.

மேற்குறித்த சட்டங்களில் சொந்தக் காணியில் சனங்கள் வராமல் நடக்கும் காட்சிகள் அடங்கவில்லை.

## முதல் பிரதி—A மாதிரிக் கடுதாசி.

1912 ம் ஆண்டின் 7 ம் "பிரசித்த காட்சிகளைப்பற்றிய" கட்டளைச்சட்டத்தின் 4 ம் சட்டத்தின்படி கொடுக்கும் லைசன்ஸ்.

1. லைசன்ஸ்காறனுடைய பேரும் விலாசமும் :————.
2. லைசன்ஸ் கொடுக்கப்பட்ட காணியின் மனேச்சரின் பேரும் விலாசமும் :————.
3. லைசன்ஸ் கொடுக்கப்பட்ட காணியுடைய விவரமும் இருக்கு மிடமும் :————.
4. லைசன்ஸ் கொடுக்கப்பட்ட காணியின் விசாலம் :————.
5. ஒருதரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் ஆட்களின் தொகை :————.
6. கொள்ளக்கூடிய ஆட்களினுடைய முழுத்தொகை :————.
7. இடம் திறந்திருக்கக்கூடிய மணித்தியாலங்கள் :————.
8. அக்காணிகள் பாவிக்கப்படும் காரணங்கள் :————.
9. போக்குவரவுசெய்யும் வாசல்களுடைய தொகை :————.
10. கொடுக்கும் விதானத்தின் தொகை ·————.
11. லைசன்சின் கடைசி நாள் :————.
12. 3 ம் சட்டத்தின் பிரகாரம் லைசன்ஸ் கொடுக்கிறவர் கொடுக்கும் ஒழுங்குகள் :————.

இந்த லைசன்ஸ் கீழ்க்குறிக்கும் நிபந்தனைகளுட்பட கொடுக்கப்பட்டிருக்கிறது.

(1) லைசன்ஸ் கொடுப்பவருடைய அனுமதியில்லாமல் லைசன்ஸ் மாறிக்கொள்ள இயலாது.
